[1993 ஏப்ரல் 19

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. சி. சுவாமிநாதன்.

திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே பதில் சொல்லுகிறபோது தெலுங்கைத் தாய்மொழியாகக் கொண்டு படித்தவர்கள், குறைந்தபட்சம் தமிழில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். அதில் அவர்கள் தேர்ச்சி செய்யப்பட்ட பிறகு அவர்களுக்கு அந்த வேலை வாய்ப்பில் முன்னுரிமை கொடுக்கப்படும் என்று அறிவித்து இருக்கிறார்கள். ஆனால், தூர்தர்ஷன் போன்ற, தொலைக்காட்சி நிலையங்களில் பணியாற்றுகின்றபோது பல்வேறு மாநிலங்களுக்குச் சென்று பணியாற்றக் கூடியவர்கள் அங்கே அந்தந்த மாநில மொழியைத் தெரிந்துகொள்ளவேண்டும், கற்றுக் கொள்ள வேண்டும் என்று தெரிவிக்கின்றபோது. . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. சி. சுவாமிநாதன், கேள்விக்குச் சீக்கிரம் வாருங்கள்.

திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இந்தியை அறவே படிக்கக் கூடாது என்ற சூழ்நிலைமை இருக்கிறது. நாம் தூர்தர்ஷன் போன்ற நிலையங்களில் இந்தி படிக்கக் கூடாது என்று சொல்வது எந்தவிதத்திலேயும் நியாயமாக இருக்காது. . . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இது மூல வினாவுக்குத் தொடர்பு இல்லாத துணை வினா.

வினா எண் 389, செல்வி எல். சுலோசனா, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

389—

சாலையோரப் பூங்காக்களை போக்குவரத்துக் கழகங்கள் மூலம் பராமரித்தல்.

*14237—செல்வி எல். சுலோசனா : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சாலையோரப் பூங்காக்களை நல்ல முறையில் பராமரிக்க போக்குவரத்துக் கழகங்கள் சார்பில் முறைப்படுத்த அரசு ஆவன செய்யுமா ?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1993 ஏப்ரல் 19]

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

தமிழ் நாட்டின் மொத்தமுள்ள 16 போக்குவரத்துக் கழகங்களில் 13 போக்குவரத்துக் கழகங்களில் சாலையோர பூங்காக்களை பராமரிக்கும் உத்தேசம் ஏதும் இல்லை. ராணி மங்கம்மாள் போக்குவரத்துக் கழகம் வேடசந்தூர் பணி மனையில் நெடுஞ்சாலை ஓரத்தில் ஒரு பூங்காவினையும், நேசமணி போக்குவரத்துக் கழகம் கன்னியாகுமரி நகரில் காந்தி மண்டபத்தின் முன் பக்கம் ஒரு பூங்காவினையும், பாண்டியன் போக்குவரத்துக் கழகம், மதுரை பெரியார் பேருந்து நிலையம் அருகில் முக்கோண போக்குவரத்துத் திட்டு ஒன்றினையும் பராமரித்து வருகிறது.

செல்வி எல். சுலோசனா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொது நலச்சங்கங்கள் தொழிற்சாலைகள் வங்கிகள் சார்பாகச் சில இடங்களிலே சாலையோரப் பூங்காக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. பல இடங்களிலே பூங்காக்களே கிடையாது. சாலை ஆக்கிரமிப்புகளால் போக்குவரத்துக்குத்தான் இடையூறாக உள்ளது. எனவே, தனிநபர் ஆக்கிரமிப்புகளால் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுவதைத் தடுக்க சாலையோரப் பூங்காக்களைப் பராமரிக்க அரசு மறுபரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதற்குச் சாத்தியக்கூறுகள் இல்லை என்று நான் குறிப்பிட்டேன். பூங்காக்களைப் பராமரிப்பதற்குப் பல இலட்சம் ரூபாய் செலவு செய்ய வேண்டியிருக்கிறது. போக்குவரத்துக் கழகத்திலே எடுத்துக் கொண்டால் 20, 30 இடங்களில் பூங்காக்களை நாம் பராமரிக்க வேண்டும் என்று கோரிக்கை வைக்கப்படும். ஆகவேதான், நம்முடைய தமிழகத்தின் முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் போக்குவரத்து நெரிசலைக் கருத்தில் கொண்டுதான் இளைய சமுதாயத்தைச் சார்ந்த குழந்தைகள், எல்லாப் போக்குவரத்துக் கழகங்களினுடைய தலைநகரங்களிலும் போக்குவரத்து விதிமுறைகளைப் புரிந்து கொள்வதற்காக போக்குவரத்து விதிமுறைகளுக்காகவே பூங்காக்கள் அமைப்பதற்கு இந்த ஆண்டு நம்முடை ஒப்பற்ற தலைவியாக இருக்கின்ற நம்முடைய தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார்கள். ஆகவே, பூங்காக்களைப் பராமரிப்பதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை,

[1993 ஏப்ரல் 19

செல்வி எல். சுலோசனா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் 3 போக்கு வரத்துக் கழகங்களின் மூலமாக சாலையோரப் பூங்காக்கள் அமைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார்கள். கோவை மாவட்டத்திலே சேரன் போக்குவரத்துக் கழகத்தின் சார்பிலே ஒரு சாலையோரப் பூங்கா அமைக்கப்படுமா என்று அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மூன்று போக்குவரத்துக் கழகங்களைத் தவிர பற்ற போக்கு வரத்துக் கழகங்களிலே ஆரம்பிக்கக்கூடாது என்று அரசு உத்தரவு வழங்கியிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : டாக்டர் எம். மோசஸ்.

டாக்டர் எம். மோசஸ் : மாண்புமிகு பேரவைத் துணை தலைவர் அவர்களே, கன்னியாகுமரியில் உள்ள காந்தி மண்டபத்தில் பராமரிக்கப்பட்டு வரும் பூங்காவை நேசமணி போக்குவரத்துக் கழகம் பராமரிப்பதாகச் சொன்னார்கள். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்தப் பூங்கா, பூங்காவாகவே இல்லை. டொதுமக்கள் கழிப்பிடமாக இருக்கிறதென்பதை மிகவும் வருத்தத்தோடு சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். தயவு செய்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நல்ல முறையிலே, அந்தப் பூங்காவினைப் பராமரிக்க ஏற்பாடு செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-40

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று கேள்வி கேட்கும் வரையிலும் உறுப்பினர் என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவரவில்லை. ஏதோ ஒரு குற்றச் சாட்டை இந்த அரசு மீது சுமத்த வேண்டுமென்ற எண்ணத் தோடு இருக்கின்ற அவர்கள் தான் இதைச் சொல்கிறார்களே தவிர, இந்தக் கருத்து பல ஆண்டுகாலமாக அவருக்குத் தெரியும். ஏன் அவர் அதைக் குறிப்பிடவில்லை என்பது எனக்கு புரியவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 390, திரு. தே. ஜனார்தனன், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.